மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) இந்திய அரசு நிறுவனமாகிய மத்திய மீனளக் கார்ப்பரேஷன் மீன்பிடி படகுகளுக்குத் தேவையான மரீன் டீசல் எஞ்சின்கள் உற்பத்தி செய்யும் தொழிற்சாலை ஒன்றினை எண்ணூரில் அமைக்கத் திட்டமிட்டுள்ளது.

(இ) இத்திட்டத்திற்கு ஏறக்குறைய மூன்று கோடி ரூபாய் செலவாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. மேற்சொன்ன கார்ப்பரேஷன் இந்த மூலதனத்தில் 90 சதவிகிதம் அளிக்கும்.

THIRU K. VINAYAKAM : Sir, when was it started and whether the diesel engines that are produced by this Corporation are any better than those we are already importing? Also have they been tried with the high speed fishing boats?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, ஜப்பான் கம்பெனியாக இருக்கின்ற யான்மர் டீசல் இன்ஜின் கம்பெனி (ஒஸாகா) யினுடைய கூட்டுறவோடு இந்தத் தொழிற்சாலை ஆரம்பிப்பதாக, வங்காளத்தைச் சேர்ந்த இந்துஸ்தான் யான்மர் லிமிடெட் என்னும் கம்பெனியார் முன்வந்திருக்கிறார்கள். சென்ட்ரல் ஃபிஷரீஸ் கார்ப்பரேஷன் நூற்றுக்கு 90 பங்கு தரும், பாக்கி பத்து பங்கை ஜப்பான் கம்பெனி ஏற்றுக்கொள்ளுகிறது. யான்மர் இன்ஜின்கள்தான் இப்பொழுது மீனவர்களால் விரும்பப்படுகின்றன. அத்தகைய இன்ஜின்களை உற்பத்தி செய்வதன் மூலம் அதற்கு நல்ல கிராக்கி ஏற்படக்கூடும் என்று கருதப்படுகிறது.

### தமிழகச் சிறு இனாம்கள் ஒழிப்புச் சட்டம்

*254 வினா—திரு. ஆ. கு. சுப்பையா : மதிப்பிற்குரிய உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தமிழ்நாடு இனாம் ரயத்துவாரி சட்டத்தை தீவிரமாக அமல் நடத்த என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

(இ) இதுவரையில் எத்தனை கிராமங்கள் எடுத்துக்கொள்ளப்பட்டு பட்டா வழங்கப்பட்டுள்ளன?

THE HON. THIRU K. A. MATHIALAGAN : (a) In order to speed up the work under the Madras Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1963 (Madras Act 26 of 1963) and the Madras Minor Inams (Abolition and Conversion into Ryotwari) Act, 1963 (Madras Act 30 of 1963), Annual programme of settlement work under the various stages in respect of the inam estate areas and the minor inams has been drawn up in advance with reference to the availability of the Settlement staff and approved by the Board of Revenue (SE). It is proposed to complete the Settlement work under the two Acts in the year 1971. The target for each stage of Settlement work has also been fixed so as to adhere to the approved programme. The work turned out under each stage is also reviewed monthly by the Settlement Officers and the Director of Settlements. The Director is also inspecting the

Branch Settlement Offices periodically to see whether the work is proceeding on right lines and he guides the staff on the proper procedure to be followed.

(b) Minor inams covered by 1,55,894 title deeds comprised in 13.999 villages and occupying an area of 1,576.98 sq. miles have been taken over and pattas in 35,920 cases have so far been issued.

One thousand eight hundred and thirty-three estates have been taken over by the Government under the Madras Inam Etates (Abolition and Conversion into Ryotwari) Act, 1963. Patta enquiry has not yet been taken up in these villages since the survey work has not yet been completed.

**திரு. ஆ. கு. சுப்பையா** : மொத்தம் எடுத்துள்ள நிலங்களைப் பற்றி அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். இந்தச் சட்டம் கொண்டுவந்து நான்கு ஆண்டுகளுக்குமேல் ஆகிறது. ஏன் இவ்வளவு தாமதமாக எடுக்கப்படுகிறது என்பதை அறிய விரும்பு கிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்** : தாமதமாக இருக்கிறது என்பதை இந்த சர்க்கார் ஒப்புக்கொண்டிருக்கிறது. அதைத் துரிதப்படுத்துவதற்காக என்ன என்ன ஏற்பாடுகள் செய்யப்பட்டி ருக்கின்றன என்பதை நான் மூலக் கேள்விக்கு பதில் அளிக்கும் போதே கூறினேன்.

**திரு. க. ர. நல்லசிவன்** : மைனர் இனும் அபாலிஷன் ஆக்டின்கீழ் கோயில் பூசாரிகள், கோயில் ஊழியர்கள் இவர்களுக்கு அந்த நிலத்திலிருந்து தற்போதுள்ள சட்டத்தின் பிரகாரம் கிடைப்பது கிடையாது. அவர்களுக்குக் கிடைக்கவேண்டும் என்ற நோக்கத் தோடு சர்க்காரிடம் அவர்கள் விண்ணப்பம் கொடுத்தார்களா? அந்த விண்ணப்பத்தைக் கவனித்து சர்க்கார் நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறதா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்** : விண்ணப்பங்கள் வந்து இருக்கின்றன. அதைப்பற்றிய விவரங்கள் பரிசிலனையில் இருக் கின்றன.

THIRU K. VINAYAKAM : Sir, whereas the extended area of the Madras City comprises many minor inams and whereas the survey is not yet over in spite of so many requests made by those concerned, will the Government order the formation of a new survey party for the extended area in the Madras City and then survey the lands and grant pattas in time to the owners of the lands?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்** : Sir, I think Madras City is included in the Madras State. கனம் உறுப்பினர் அவர்கள், சென்னை நகரத்திற்குத் தனியாக பிரத்தி யேகமாக செய்யப்படுமா? என்று கேட்கிறார்கள். சென்னை நகரம் என்பதும் இந்த சென்னை இராஜ்யத்திற்கு உட்பட்டதுதான். புதிதாக அதிகாரிகள் நியமிக்கப்பட்டு அந்த வேலைகள் துரிதப் படுத்தப்பட்டிருக்கின்றன என்று நான் ஏற்கனவே சொன்னேன்.